தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972-ம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 45/72) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழி கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 45/72) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 46/72).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன் வடிவு @ (சட்டப்பேரவை சட்ட முன் வடிவு எண் 46/72) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தலைவரவர்களே, ப்ரீஹோல்ட் என்று இந்த நாட்டிலே நிலங்கள் இருக்கின்றன. அது என்னவென்று கேட்டால், 20 ஆண்டுக் காலம் ஒருவர் இருக்கிற நிலத்தீர்வையை அரசாங்கத்திற்கு மொத்தமாகக் கொடுத்துவிட்டால், காலாகாலத்திற்கு அந்த நிலத்திற்குத் தீர்வை கட்ட வேண்டாமென்று ஒரு விதி, "போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ்"லே, இருக்கிறது. இதைப் பயன்படுத்திக் கொண்டு பலபேர் இந்த நாட்டிலே ஏராளமான ப்ரீஹோல்ட் நிலங்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வரியே இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால்; அவைகள் ரயத்துவாரி பூமிகள்தான். அந்த நிலத்திலே பல சிக்கல்கள் இருந்து கொண்டிருக்கின்றன. நிலத்தை யார் யார் அனுபவித்து வருகிறார்கள்

@ 93—130-ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1972 டிசம்பர் 14] [திரு. ப. உ. சண்முகம்]

என்றெல்லாம் சிக்கல் இருக்கிறது. ரயத்துவாரி பூமியாக இருந்தும்கூட, வரி வசூலிக்காத காரணத்தால், வேறு பல சிக்கல்களும் வருகின்றன. அந்த ரயத்துவாரி பூமிக்கான அந்த ப்ரீஹோல்ட் டெனுரை மாற்றியமைத்து, வரி வசூலிக்கின்ற அதிகாரத்தை எடுப்பதாகும். இப்போது தமிழ் நாட்டில் எவ்வளவு நிலத்திற்கு வரி போடாமல் விடப்பட்டிருக்கிறது என்று கணக்கைச் சேகரித்துப் பார்க்கும்போது, நமக்கே ஆச்சரியமாக இருக்கிறது, இவ்வளவு நிலங்கள் வரியே இல்லாமல் இருக்கின்றனவா என்று. சேலம் குமாரபாளையம் அக்கிரகாரம் என்று சொல்லப்படுகின்ற ஒரு இடத்தில் மட்டும் 1,40,178 ஏக்கரா நிலம் "ப்ரீஹோல்ட்"ஆக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலங்களைப் பல பேர் இந்த நாட்டிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த குமாரபாளையத்திலே உள்ள விசித்திரம் என்னவென்றால், அங்கே மைசூர் மகாராஜாவுக்குப் பணம் வசூலித்துக் கொடுத்தார்கள் என்றும், அவர்கள் அந்த நிலங்களை வைத்துக் கொள்ளலாம் என்றும் அவர் சொன்னதாகச் சொல்லப்படுகின்றது. அம்மாதிரியே இந்த நிலங்கள் அவர்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன. இவைகளையெல்லாம் ரத்து செய்ய வேண்டும். அந் நிலங்களுக்கு வரி போட வேண்டுமென்பதற்காக, "ப்ரீஹோல்ட்" என்பதை ரத்து செய்கின்ற இந்தச் சட்டம் சிக்கல் இல்லாத சட்டம். இதையாவது திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்.

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரி தீர்வை விதிக்கும் சட்ட முன் வடிவு (சட்டப்பேரவை சட்ட முன் வடிவு எண் 46/72) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன் வடிவு, பரிந்துரைகள் செய்வதற்காக, எடுத்துக்கொள்ளப் பட்டது.

(பரிந்துரைகள் இல்லை).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, "சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன் வடிவு (சட்டப்பேரவை சட்ட முன் வடிவு எண் 46/72) திருப்பி அனுப்பப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 46/ 72) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.